<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : | STC.528/2022 | Date:08.02.2024 |
| Deposition of Witness for | : | **பு.சா.1** | |
| Name | : | **சங்கர்** | |

**(சாட்சி மனுவின்மீது திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

**<u>குறுக்கு விசாரணை–</u>**

**1.** எதிரியை எனக்கு எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் சுமார் 23 ஆண்டுகளாக தெரியும். எதிரி எனக்கு உறவினரா என்றால் இல்லை நண்பர். எதிரியின் சொந்த ஊர் எது என்றால் சங்ககிரி. எதிரி இந்தியன் பிரிண்டர்ஸ் என்ற நிறுவனத்தை எந்த முகவரியும் எத்தனை வருடங்களாக நடத்தி வருகிறார் என்றால் ஈரோட்டில் நடத்தி வருகிறார் எத்தனை வருடங்கள் என்று ஞாபகம் இல்லை. வழக்கறிஞர் அறிவிப்பு எதிரியின் எத்தனை முகவரிக்கு அனுப்பினேன் என்றால் மூன்று முகவரிகளுக்கு அனுப்பினேன். எந்தெந்த முகவரிக்கு அனுப்பினேன் என்றால் ஈரோட்டிலுள்ள இரண்டு முகவரிகளுக்கும், சங்ககிரியிலுள்ள ஒரு முகவரிக்கும் அனுப்பினேன்.

2. மேற்படி முகவரிகளை எனக்கு தெரியுமா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. எதிரி எங்கு தொழில் செய்கிறார் என்று எனக்கு தெரியாது என்றும், அதனால் தான் மேற்படி முகவரிகளை எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி மாதம் எவ்வளவு வருமானம் ஈட்டுகிறார் என்றால் குறிப்பாக தெரியவில்லை ஆனால் லட்சங்களில் வருமானம் ஈட்டுகிறார். நான் எதிரிக்கு பணம் கொடுத்த பிறகு எங்களுக்குள் சமுகமான உறவு இல்லை என்றால் இரண்டு வருடம் இருநத்து. திருப்பி செலுத்தும் அளவிற்கு எதிரிக்கு வசதி உள்ளதா என்று நான் விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் எதிரி எனது நண்பர் என்பதால் விசாரிக்கவில்லை.

3. எதிரியின் பெயரில் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் உள்ளதா என்றால் சங்ககிரியில் சொத்து இருப்பதாக தெரிவித்துள்ளார். இதற்கு முன்பு எதிரிக்கும், எனக்கும் வரவு செலவு இருந்ததா என்றால் இல்லை. எனக்கு மாதம் வருமானம் என்னவென்றால் ரூ.55,000/– ஆகும். எதிரியை தவிர வேறு நபருக்கு கடன் கொடுத்தள்ளேனா என்றால் இல்லை. வெளி நபர்களிடமிருந்து கடன் பெற்றுள்ளேனா என்றால் வங்கியிலிருந்து கடன் பெற்றுள்ளேன். எந்தெந்த வங்கியிலிருந்து கடன் பெற்றுள்ளேன் என்றால் இந்தியன் வங்கி, எச்.டி.எப்.சி. வங்கி, தமிழ்நாடு கிராம வங்கி மற்றும் புல்லட்ராம்

என்ற தனியார் வங்கி ஆகியவற்றில் இருந்து கடன் பெற்றுள்ளேன். மொத்தமாக எவ்வளவு கடன் பெற்றுள்ளேன் என்றால் பதினாரு லட்சம் வாங்கியுள்ளேன். 4. மேற்படி கடன்களை 2018 டிசம்பர் மாதத்தில் வாங்கினேன் என்றால் சரிதான். புல்லட்ராம் தனியார் வங்கியிலிருந்து எவ்வளவு ரூபாய் கடன் எவ்வளவு வட்டிக்கு பெற்றேன் என்றால் ரூ. 6,60,000/– வாங்கினேன். வட்டி எவ்வளவு என்று ஞாபகம் இல்லை. மேற்கண்டவாறு கடன் பெற்றுதான் எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான். நான் ஒரு கடனாளியாக இருக்கும்போது நான் கடன் பெற்று எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்று கூறுவது நம்பும்படியாக இல்லை என்றால் சரியல்ல.

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).**